பக்கங்கள்:-16

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆடி 14 | செவ்வாய்க்கிழமை | 30.07.2024 | அதிர்வு 364

## ரணிலுக்கே பெருவெற்றி

### ஐ.தே.க. திட்டவட்டம்



“ஜனாதிபதித் தேர்தலில் மொட்டுக் கட்சி தனியாகச் சென்று வேட்பாளரைக் களமிறக்குவதால்சுயாதீன வேட்பாளரான 06

# மொட்டு தனிவழி



## விரைவில் வேட்பாளரைப் பெயரிடத் தீர்மானம்





ஜனாதிபதித் தேர்தலில் தமது மொட்டுச் சின்னத்தின் கீழ் வேட்பாளர் ஒருவரைப் பெயரிட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தீர்மானித்துள்ளது.

கட்சியின் நிறைவேற்றுக் குழு நேற்று கூடியபோதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்குப் பொதுஜன பெரமுன ஆதரவு வழங்காது.

மொட்டுக் கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று மாலை கட்சியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டம் இடம்பெற்றது. 06

## அனைத்து மாகாணங்களிலும் ஐக்கிய மக்கள் சக்தி வெல்லும்

### சஜித் அதீத நம்பிக்கை



வரும் ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு, கிழக்கு உள்ளிட்ட அனைத்து மாகாணங்களிலும் ஐக்கிய மக்கள் சக்தி வெற்றியடையும் என்று அக்கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பதுளை மாவட்டம், பசறை தேர்தல் தொகுதிக்கான ஐக்கிய மக்கள் சக்தியின் தொகுதிக் கூட்டம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் 06




ஜனாதிபதித் தேர்தலில் மொட்டின் ஆதரவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்குப் பெற்றுக் கொடுப்பதற்கு நேற்று மாலை வரை ரணில் பக்கத்தில் இருந்து பகீரதப் பிரயத்தனம் செய்யப்பட்டதாகத் தெரிகின்றது.

இவ்விடயத்தை ஒட்டி சில தினங்களுக்கு முன்னர் மஹிந்த ராஜபக்ஷவை ரணிலின் வலது கையான சாகல இரட்நாயக்க மற்றும் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த ஆகியோர் தேடி வந்து சந்தித்து அழுத்தம் கொடுத்தனர்.

அப்போது இன்னும் மூன்று வாரத்தில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி 06

# ஜனாதிபதியால் வழங்கப்பட்ட வாக்குறுதியில் எதுவும் இதுவரை நிறைவேற்றப்படவில்லை!

## நாடாளுமன்ற உறுப்பினர் இராதாகிருஷ்ணன் குற்றச்சாட்டு

(பொகவந்தலாவை: எஸ் சதீஸ் )

நாட்டின் ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு பல்வேறு வாக்குறுதிகளை வழங்கிய போதிலும் அதில் எதுவும் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதிதலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் குற்றம்சுமத்தியுள்ளார்.

நேற்றுத் திங்கள்கிழமை ஹட்டனில் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இக்கருத்தை வெளியிட்டார்.

இதன் போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மலையகப் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு 1,700 ரூபா சம்பளத்தை வழங்குவதாக கடந்த மே மாதம் கொட்டகலை பகுதியில் இடம்பெற்ற மேதின நிகழ்வின் போது வாக்குறுதி அளித்தார். ஆனால் அதனைக் கூட அவரால் இதுவரையிலும் பெற்றுக்கொடுக்க முடியாமல் போனது.

உற்பத்திப் பொருள்களின் விலை குறைவடைந்துள்ளதாக கூறுகிறார்கள். ஆனால் இதுவரையிலும் எந்த உற்பத்தி பொருள்களின் விலைகளும் குறைக்கப்படவில்லை. இதனால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தாம் போட்டியிடுவார் என ரணில் விக்ரமசிங்க அவர்கள் அறிவித்திருக்கிறார். ஆனால் அவர் எதனையும் செய்யாமல் மொட்டு கட்சியைக் காப்பாற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார். இன்றும் அதைதான் எதிர்பார்த்து கொண்டிருக்கிறார். எவ்வாறு ராஜபக்ஷ குடும்பத்தைக் காப்பாற்றுவது என்பது தொடர்பில் செயல்பட்டு கொண்டிருக்கிறார்

மொட்டு தனியாக வந்தால் என்ன, மொட்டு ரணில் விக்ரமசிங்கவை இணைத்துக் கொண்டு வந்தாலும் அவர் மொட்டுக் கட்சியின் அங்கத்தவர் என்பது புலபட்டுள்ளது. இதனை மாற்றியமைக்க எவராலும் முடியாது. வெளிநாட்டு கடன்களை மீளச் செலுத்த முடியாமல் போனதன் காரணமாகத்தான் நாடு வங்குரோத்து நிலமைக்கு உள்வாங்கப்பட்டது. நாட்டில் எரிபொருள், எரிவாயு போன்றவற்றுக்கு தட்டுபாடு




ஏற்பட்டதை சரி செய்யவே தான் வந்தார் என ரணில் விக்ரமசிங்க தம்பட்டம் அடித்துக் கொண்டு இருகிறார்.

நாட்டில் இன்று கொலைச்சம்பவங்கள் அதிகரித்துள்ளன. சட்டம் - ஒழுங்கு நிலைநாட்டபடவில்லை. இன்று அமெரிக்காவைப் போன்று வ5துப்பாக்கியினை பயன்படுத்திக் கொலை சம்பவங்கள் அதிகரித்துள்ளன. உரியவர்கள் இதுவரை கைதுசெய்யப்படவில்லை

கடந்த அரசாங்கத்தின் போது 52 நாள்கள் பிரச்சினை ஏற்பட்ட போது ரணில் விக்ரமசிங்க அவர்கள் உயர் நீதிமன்றத்தை நாடினார். அன்று நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை ஏற்றுக்கொண்டார். ஆனால் இன்று உயர் நீதிமன்றம் வழங்கும் தீர்ப்பை ஏற்றுக்கொள்ள மறுப்பு தெரிவிக்கிறார்.

13 ஆவது சீதிருத்தம் என்பது மீண்டும் அமுல் படுத்தப்பட வேண்டும். இலங்கை நாட்டில் வாழுகின்ற ஒட்டு மொத்த சிறுபான்மை மக்களுக்கும் இந்த 13 ஆவது திருத்தம் அவசியம். மாகாண அமைச்சராக நான் மூன்று முறை இருந்த போது அதில் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தி திட்டங்களை மத்திய அரசாங்கத்தில் கூட முன்னெடுக்க முடியவில்லை. மாகாண சபைகளை மீண்டும் இயங்க வைத்து அரசாங்கத்துடைய வேலை பளுவைக் குறைத்து மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்பதுதான் இந்த 13 ஆவது திருத்தின் அடிப்படை கொள்கையாகும். - என்றார்.

# தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு ஐக்கிய மக்கள் சக்தி கடிதம்

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

தேர்தல் சட்டம் அனைவருக்கும் அமுல்படுத்தப்படவில்லை என்ற தொனிப்பொருளின் கீழ் அனுப்பப்பட்ட கடிதத்தில் 8 அம்ச விடயங்கள் அடங்கியுள்ளன.

அரசாங்கத்தின் நிதியைப் பயன்படுத்தாது முன்னெடுக்கப்படும் பிரபஞ்ச வேலைத்திட்டத்தை ஜனாதிபதி தேர்தலை இலக்கு வைத்து நிறுத்த தேர்தல்கள் ஆணைக்குழு முயற்சித்த போதிலும், அரச நிதியைப் பயன்படுத்தி முன்னெடுக்கப்படும் செயற்திட்டம் தடுக்கப்படாமை கவலையளிப்பதாக அந்த கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.





# ஜீவன் தொண்டமான் நேற்று நீதிமன்றில் முன்னிலையானார்!

(ஆ.ரமேஸ்)

அமைச்சர் ஜீவன் தொண்டமான் உள்ளிட்ட நால்வர் நகர்த்தல் பத்திரம் ஒன்றை முன்வைத்து, நேற்று நுவரெலியா மாவட்ட நீதிமன்றில் முன்னிலையாகினர்.

பீட்ரு தோட்டத்தில் உள்ள தொழிற்சாலை ஒன்றுக்குள் கடந்த மே மாதம் 30 ஆம் திகதி அத்துமீறிப் பிரவேசித்து, களனிவெளி பெருந்தோட்ட நிறுவனத்தின் அதிகாரிகளை சில மணி நேரம் தடுத்து வைத்திருந்தனர் என அமைச்சர் ஜீவன் தொண்டமான் உள்ளிட்ட சிலர் மீது வழக்கு தொடரப்பட்டிருந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பில், சந்தேக நபர்களைக் கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு கடந்தமுறை வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, நுவரெலியா மாவட்ட நீதிபதியினால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

மேற்படி வழக்கு அடுத்த மாதம் 26 ஆம் திகதி விசாரணைக்கு அழைக்கப்படவிருந்த நிலையில், நேற்று நகர்த்தல் பத்திரம் ஒன்றை முன்வைத்து அமைச்சர் ஜீவன் தொண்டமான் உள்ளிட்ட நால்வர் நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தனர்.

எனினும், அந்த வழக்கு தொடர்பில், பொலிஸாரால் சந்தேக நபர்கள் இன்னும் பெயரிடப்படாமையினால், விசாரணை தொடர்பான அறிக்கையை அடுத்த மாதம் 26 ஆம் திகதி நீதிமன்றில் முன்வைக்குமாறு நுவரெலிய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோருக்கு நீதிபதி உத்தரவிட்டு வழக்கை ஒத்திவைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதையடுத்து நீதிமன்றத்தை விட்டு வெளியேறிய அமைச்சர் ஜீவன் தொண்டமான் உள்ளிட்ட குழுவினரும் ,சட்டத்தரணிகளும் ஊடகங்களுக்குக் கருத்துத்தெ ரிவித்தனர்.

இதன்போது கருத்து வெளியிட்ட ஜீவன் தொண்டமான் –

தனக்கு எதிராகவும், ஊடகங்களை திசை திருப்பியும், பொதுமக்கள் மத்தியில் களங்கத்தையும் பதற்றத்தையும் ஏற்படுத்தும் வகையிலும் ஊடகங்கள் சிலவும் கம்பனி தரப்பு சட்டத்தரணிகளும் தவறான கருத்தை பரப்பியுள்ளனர். இவ்வாறு அவதூறாகக் கருத்தைப் பரப்பியவர்களுக்கு எதிராக வழக்குத் தொடர்வேன் என தெரிவித்தமையுடன் ஊடகங்களும் சரி, பிழை பார்த்து செய்திகளை வெளியிட வேண்டும் என வும் தெரிவித்தார்.





# நாமலுக்கு எதிராக பொலிஸில் அமைச்சர் பந்துல முறைப்பாடு

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக் ஷவுக்கு எதிராக அமைச்சர் பந்துல குணவர்தன ஹோமாகம பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

நாமல் ராஜபக்ஷ் தமக்கு அறிவித்தல் வழங்காமல் ஹோமாகமவில் பொதுஜன பெரமுன கூட்டத்தை ஏற்பாடு செய்தமை தொடர்பில் அமைச்சர் பந்துல குணவர்தன இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளார்.

நாமல் ராஜபக்ஷ கட்சி ஒழுக்கத்தை மீறியுள்ளார் என முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இது போன்ற விடயங்களுக்கு நடவடிக்கை எடுக்க முடியாது எனப் பொலிஸார் கூறியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.









# உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை மீறுபவர்கள் சிறை செல்ல நேரிடும்

## ரணில் அரசுக்கு சஜித் சிவப்பு எச்சரிக்கை

இந்த நாட்டு மக்கள் நீதி, நியாயம் மற்றும் சட்டத்தின் ஆட்சியைக் கொண்ட யுகத்தை உருவாக்கும்போது, உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை, நாட்டின் சட்டத்தை அப்பட்டமாக மீறிச் செயற்படுபவர்கள் சட்டத்துக்கு முகம் கொடுத்து கடும் தண்டனையை எதிர்நோக்க நேரிடும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எச்சரிக்கை விடுத்தார்.

பதுளை மாவட்டம், பசறை தேர்தல் தொகுதிக்கான ஐக்கிய மக்கள் சக்தியின் தொகுதிக் கூட்டம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் தலைமையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பசறை நகரில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

“நாட்டில் இன்று ஒரு வினோதமான அரசே காணப்படுகின்றது. இந்த அரசு உயர்நீதிமன்றத்தின் முடிவுகளை நிராகரித்துச் செயற்படுகின்றது. நாட்டின் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புக்களைப் பின்பற்றுகின்றார்கள் இல்லை. பதில் ஜனாதிபதி, அவரின் வகுப்புச் சகாவான பிரதமர், சபாநாயகர், நாட்டைச் சீர்குலைத்த திருடர் தரப்பு ஆகியோர் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை, நாட்டின் சட்டத்தை அப்பட்டமாக மீறிச் செயற்படுகின்றனர். ஜனாதிபதியும் பிரதமரும் கூறும் சட்டமே இன்று நாட்டில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. அவர்கள் அரசமைப்பை அப்பட்டமாக மீறி வருகின்றனர். நாட்டின் சட்டம் மற்றும் அரசமைப்பை உதாசீனப்படுத்தி வருகின்றனர்.

அவர்கள் எண்ணுவது போல், அவர்கள் சொல்வது போல் நாட்டின் சட்டமாகக் கருதப்பட்டால் அவர்களின் தலைவிதியை தீர்மானிக்கும் நாள் நெருங்கிவிட்டது என்றே நான் அவர்களுக்குக் கூற வேண்டும். இந்த நாட்டு மக்கள் நீதி, நியாயம் மற்றும் சட்டத்தின் ஆட்சியைக் கொண்ட யுகத்தை உருவாக்கும்போது, அரசமைப்பை மீறுபவர்கள் சட்டத்துக்கு முகம் கொடுத்து கடும் தண்டனையை எதிர்நோக்க நேரிடும்.

வாழ்க்கை நெருக்கடியில் தவிக்கும் மக்களுக்கு இப்போது தீர்வும் பதில்களுமே தேவை. ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்த பிறகு, நியாயமான காலத்துக்குள், துக்கம், அசௌகரியம், அழுத்தங்களைச் சந்திக்க நேரிடாத மக்கள் வாழ்க்கையை உருவாக்கித் தருவேன். மாளிகைகளில் சுகபோகமாக வாழும் நாட்டை ஆளும் பிரபுக்களுக்குச் சாதாரண மக்கள் படும் துன்பம் புரிவதில்லை. இவர்களுக்கு இரக்கமும் கருணையும் இல்லை. இவ்வாறான ஆட்சியாளர்களால் வங்குரோத்து நிலையில் உள்ள எமது நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது.

கருணை கொண்ட, மக்களின் எண்ணங்கள் மற்றும் விருப்பங்களுக்கு ஏற்ப முடிவுகளை எடுக்கும் வலிமையான, ஆற்றல் மிக்க, நேரடியாக முடிவெடுக்கும் தலைவரும் அரசும் நாட்டுக்குத் தேவை.

நாம் மாளிகை அரசியல் விளையாடும் அரசியல்வாதியல்லாததால், அந்த மாளிகைகளை இலவசக் கல்வியின் கீழ் நவீன தொழில்நுட்பங்களைக் கற்பிக்கும் கல்வி நிலையங்களாக மாற்றி, இலவச உயர்கல்வி நிலையங்கள் மூலம் உலகையே வெல்லும் ஸ்மார்ட் மாண தலைமுறையை உருவாக்குவேன்.” – என்றார்.

பெரும் எண்ணிக்கையிலான மக்கள் கூட்டத்தின் பங்கேற்புடன் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் அரசியல் தலைவர்கள், மாவட்ட மற்றும் தொகுதிகளின் அமைப்பாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.









# ஜனாதிபதி ரணிலுக்கே ஆதரவு; பிரமித்த பண்டார அறிவிப்பு



எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கே ஆதரவளிக்கவுள்ளேன் என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் அறிவித்துள்ளார்.

தனது எக்ஸ் தள பக்கத்தில் அவர் இதனைப் பதிவிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அரசியல் குழு முதிர்ச்சியற்ற தீர்மானம் மேற்கொண்டுள்ளதாகவும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், பெரும்பான்மையான நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இணைந்து, மிக முக்கியமான நேரத்தில் நாட்டைக் காப்பாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தான் தொடர்ந்தும் ஆதரவளிக்கவுள்ளேன் என்றும் அவர் பதிவிட்டுள்ளார்.

# கெஹெலிய ரம்புக்வெல மீது மற்றொரு குற்றவியல் வழக்கு

## கண்டி மேல்நீதிமன்றில் ஆஜர் செய்ய உத்தரவு



தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவை கண்டி மேல்நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு வெலிக்கடை சிறைச்சாலை அத்தியட்சகருக்கு கண்டி மேல்நீதிமன்ற நீதிபதி தர்ஷிகா விமலசிறி உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 1999 ஆம் ஆண்டு இடம்பெற்ற தேர்தல் பிரசார நடவடிக்கைகளின் போது, நாவலப்பிட்டி கறுவாத்தோட்டம் பகுதியில் குண்டுத் தாக்குதல் நடத்தி ஒருவரை கொலை செய்தமை மற்றும் ஐந்து பேரை படுகாயமடைய செய்த சம்பவம் தொடர்பிலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல உள்ளிட்ட 4 பிரதிவாதிகளுக்கு எதிரான இந்த வழக்கு நாளை மற்றும் ஒகஸ்ட் மாதம் 27, 30 ஆம் திகதிகளில் விசாரணைக்கு எடுத்துமாறு மேல்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# இலங்கை வந்தார் விராட் கோலி



இலங்கை மற்றும் இந்திய அணிகளுக்கு இடையிலான ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டி ஒகஸ்ட் 2 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இந்தப் போட்டியில் பங்கேற்பதற்காக இந்திய அணி வீரர் விராட் கோலி நேற்று இலங்கையை வந்தடைந்தார்.

இந்தப் போட்டி கொழும்பு ஆர்.பிரேமதாச மைதானத்தில் நடைபெறவுள்ளதாக ஸ்ரீலங்கா கிரிக்கெட் தெரிவித்துள்ளது.

இருபதுக்கு 20 கிரிக்கெட் போட்டி கடந்த 27ஆம் திகதி ஆரம்பமான நிலையில் இந்தியா 2-0 என்ற அடிப்படையில் தொடரைக் கைப்பற்றியுள்ளதுடன், மேலும் ஒரு போட்டி மீதமுள்ளது.

இந்த நிலையில், ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டி ஒகஸ்ட் 2 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

# பங்காளிக் கட்சிகளுடன் சஜித் அவசர சந்திப்பு

எதிர்க்கட்சிதலைவர்சஜித்பிரேமதாஸ வுக்கும், ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான கூட்டணியில் அங்கம் வகிக்கும் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுக்கும் இடையிலான விசேட சந்திப்பு எதிர்வரும் முதலாம் திகதி நடைபெறவுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணி எதிர்வரும் 8 ஆம் திகதி மலரவுள்ளதுடன், அன்றைய நாளில் புரிந்துணர்வு உடன்படிக்கையும் கைச்சாத்திடப்படவுள்ளது.

எனவே, குறித்த உடன்படிக்கை, ஜனாதிபதித் தேர்தலுக்கான தேர்தல் விஞ்ஞாபனம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காகவே விசேட சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாத் பதியுதீன், ஜி.எல்.பீரிஸ், டலஸ் அழகப்பெரும உட்பட மேலும் பல தலைவர்கள் மேற்படி சந்திப்பில் பங்கேற்கவுள்ளனர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொழும்பு வருகின்றார் என்ற ஒரு கயிறும் கூட மஹிந்தவுக்கு தெரியப்படுத்தப்பட்டதாம்.

இப்போது வயது, மூப்புக் காரணமாக மஹிந்த ராஜபக்ஷ சற்றுத் தளர்ந்து இருந்தாலும், இது போன்ற அரசியல் குயுக்திகள் பலவற்றை அவர் வெற்றிகரமாகத் தாண்டி வந்ததவர்.

"ஜனாதிபதித் தேர்தல் சமயத்தில் வருகின்றாரா? நல்லது. வரட்டும்!" என்று அந்தத் தகவலைப் பெரிதும் பொருட்படுத்தாமல், தட்டிக் கழித்து, கடந்து போனாராம் மஹிந்தர் எனத் தெரிகின்றது.

மொட்டுக் கட்சியின் நேற்றைய அரசியல் குழுக் கூட்டத்தில், வரும் ஜனாதிபதித் தேர்தலில் தனித்து வேட்பாளரை மொட்டுக் கட்சி நிறுத்துவதா? அல்லது ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதா என்ற சர்ச்சை நீடித்தது. ரணிலின் அமைச்சரவையில் இடம் பெற்றிருக்கும் காஞ்சனா விஜயசேகர, பிரசன்ன ரணதுங்க, பந்துல குணவர்த்தன போன்றோர் ரணிலை ஆதரிக்க வேண்டும் என்று குத்தி முறிந்தனர்.

நாமல் ராஜபக்ஷ மறுபுறத்தில், எல்லாவற்றையும் 'செட்' பண்ணி விட்டு கூட்டத்தில் ஒன்றும் தெரியாதவர் போல பாசாங்கு பண்ணிக்கொண்டு அமர்ந்திருந்தார். அவரின் சார்பில் கட்சியின் மாவட்டப் பிரதிநிதிகள், தொழிற்சங்கப் பிரிவினர் எல்லோரும் மொட்டுச் சின்னத்துடன் அது தனது வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்று முழங்கினர். நாமல் பார்த்து புன்சிரிப்புச் சிரித்துக் கொண்டிருந்தார்.

கடைசியில் விடயம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. ரணிலை ஆதரிக்க வேண்டும் என்ற தரப்புக்கு 11 வாக்குகள் கிடைத்தன. மொட்டு தன் சொந்த வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்று கோரிக்கைக்கு 61 வாக்குகள் வீழ்ந்தன.

ஜனநாயகத்தின் அடிப்படையில் தீர்மானம் – முடிவு – எட்டப்பட்டதாக கட்சியின் செயலாளர் சாகர காரியவசம் அறிவித்தார்.

நேற்றைய கூட்டத்தில் அவ்வப்போது – இடையிடையே – பஸில் கருத்து வெளியிட்டார். தம்முடன் ஜனாதிபதி பேசிய விடயங்கள் குறித்து அவ்வப்போது அவர் சில தெளிவுபடுத்தல்களை வழங்கி, குறிப்புகளைத் தெரிவித்தார்.

மற்றபடி கூட்டத்துக்கு வந்திருந்த நாமல், சமல், பஸில் போன்றோரும், தலைமை வகித்த மஹிந்த ராஜபக்ஷவும் அதிகம் ஏதும் கூட்டத்தில் பேசவே இல்லையாம்.

பேசாமலேயே தங்கள் தீர்மானத்தை கட்சியில் முடிவாக வெற்றிகரமாக முகிழப் பண்ணிவிட்டார்கள் ராஜபக்ஷக்கள் என்பதுதான் உண்மை நிலைவரம்.

நேற்றைய கூட்டத்தில் ஜனாதிபதி ரணிலை ஆதரித்த மொட்டுக் கட்சியின் முக்கிய பிரமுகர்களான அமைச்சர்கள் இன்று பெரும்பாலும் கொழும்பில் ஒன்று சேர்ந்து, ஊடகவியலாளர் மாநாடு ஒன்றைக் கூட்டித் தங்களின் புதிய உத்தி பற்றிய அணுகுமுறையை வெளியிடுவர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## மொட்டு தனிவழி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் குறித்து இறுதித் தீர்மானம் எடுப்பதற்காக இந்தக் கூட்டம் நடத்தப்பட்டது.

இதில் பொதுஜன பெரமுனவின் முன்னிலை சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் பிரமுகர்கள், கட்சியின் தொகுதி அமைப்பாளர்கள் உள்ளிட்ட பலரும் பங்கேற்றனர்.

அதற்கமைய, மொட்டுச் சின்னத்தின் கீழ் போட்டியிட விரும்பும் வேட்பாளர் தொடர்பில் ஆராய நேற்றைய கூட்டத்தின்போது தீர்மானிக்கப்பட்டது.

தற்போதைய அரசுக்கு அதிகாரத்தை வழங்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் இதுவரை எவ்வித கருத்தையும் வெளியிடவில்லை.

பொதுஜன பெரமுனவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பல அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதாக ஏற்கனவே பகிரங்கமாக அறிவித்துள்ளனர்.

எவ்வாறாயினும், பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த சிலர் தமது கட்சியைச் சேர்ந்த ஒருவரையே வேட்பாளராகக் களமிறக்க வேண்டும் என வலியுறுத்தினர் என்று கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் எம்.பி. நேற்றைய கூட்டத்தில் தெரிவித்தார்.

அதன்படி பெரும்பான்மையான ஆதரவுடன் கட்சி சார்பில் ஒருவரை வேட்பாளராகத் தெரிவு செய்யத் தீர்மானம் எடுக்கப்பட்டதுடன் அதற்கு எதிராகக் கட்சியைச் சேர்ந்த யாரேனும் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடும் சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு எதிராக உடனடியாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சாகர காரியவசம் எம்.பி. சுட்டிக்காட்டினார்.

வெற்றியீட்டக்கூடிய ஒருவரை எதிர்வரும் சில நாள்களில் வேட்பாளராக அறிவிக்க கட்சி நடவடிக்கை எடுக்கும் என்றும் அவர் கூறினார்.

அவ்வாறு கட்சி சார்பில் வேட்பாளர் ஒருவர் நிறுத்தப்படும் பட்சத்தில், தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்குப் பொதுஜன பெரமுனவின் ஆதரவு வழங்கப்பட மாட்டாது என்றும் அக்கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் எம்.பி. தெரிவித்தார்.

இதேவேளை, பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடுவதே தமது விருப்பம் என்று அக்கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரான பிரபல வர்த்தகர் தம்மிக்க பெரேரா ஏற்கனவே அறிவித்துள்ளார்.

இது இவ்வாறிருக்கக் கடந்த வியாழக்கிழமை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்த 30 இற்கும் மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஜனாதிபதி ரணில் தலைமையிலான அரசின் செயற்பாடுகளுக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்று தெரிவித்திருந்தனர்.

இதேவேளை, ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்க மற்றும் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த ஆகியோர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைக் கடந்த சனிக்கிழமை சந்தித்தனர்.

ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுனவின் ஆதரவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்குப் பெற்றுக் கொள்வது குறித்து அங்கு கலந்துரையாடினர்.

இதன்போது ஜனாதிபதித் தேர்தலில் தம்மை ஆதரிப்பீர்களா? இல்லையா ? என்ற விடயத்தை உடனடியாக அறிவிக்குமாறு பொதுஜன பெரனமுனவிடம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கோரியுள்ளார்.

இதேவேளை, பெரும்பாலான கட்சிகளின் ஆதரவைப் பெறுவதற்காக தாம் சுயாதீன வேட்பாளராகப் போட்டியிடுவதாகப் பொதுஜன பெரமுனவின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ரணில் விக்கிரமசிங்க எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## ரணிலுக்கே பெரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி....)

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது. இந்தத் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவே மாபெரும் வெற்றியடைந்து ஜனாதிபதிப் பதவியைத் தொடர்வார்."

– இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன எம்.பி. தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

"மொட்டுக் கட்சி தனி வழியில் சென்றாலும் அந்தக் கட்சியின் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனப் பெரும்பாலான உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கே வெளிப்படையான ஆதரவை வழங்குகின்றார்கள். எனவே, ரணிலின் வெற்றியை எவரும் தடுத்து நிறுத்த முடியாது." – என்றார்.

## அனைத்து மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தலைமையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பசறை நகரில் நடைபெற்றது. இந்நிகழ்வில் உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

"இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் அனைத்து மாகாணங்கள், அனைத்து மாவட்டங்கள், அனைத்து பிரதேசங்கள், வடக்கு, கிழக்கு, மேற்கு, தெற்கு, போன்ற அனைத்து இடங்களிலும் ஐக்கிய மக்கள் சக்தி வெல்லும் என்பதை சகல ஆய்வறிக்கைகளும் வெளிக்கொணர்ந்துள்ளன. எனவே, நாட்டை வெல்லும் பயணத்தை முன்னெடுப்போம்." – என்றார்.



# தேசியக் கல்வியியற் கல்லூரி மாணவர்களுக்கான உணவுக் கொடுப்பனவு உயர்வு தேர்தலால் தாமதம்!

தேசியக் கல்வியியற் கல்லூரிகளில் பயிற்சி பெறும் ஆசிரிய மாணவர்களின் உணவுக்கான கொடுப்பனவு மேலும் பிற்போகும் நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போது, அவர்களுக்கு வழங்கப்படும் உணவுக்கான கொடுப்பனவை 5,000 ரூபாயிலிருந்து 8,000 ரூபாவாக அதிகரித்து, அடுத்த மாதம் முதல் வழங்க அரசாங்கம் தீர்மானித் துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இது தொடர்பில், கல்வி இராஜாங்க அமைச்சர் ஏ.அரவிந்த குமார் தெரிவிக்கையில், நாட்டில் தேர்தல் ஒன்று அறிவிக்கப்பட்டுள்ளதால் அந்த நடவடிக்கை தற்காலிகமாக இடைநிறுத்தப் பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

அத்துடன், ஜனாதிபதித் தேர்தல் நிறைவடைந்ததன் பின்னர் தேசிய கல்வியியற் கல்லூரிகளில் பயிற்சி பெறும் ஆசிரிய மாணவர்களுக்கான அதிகரித்த கொடுப்பனவு வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பான யோசனை கடந்த பெப்ரவரி மாதத்தில் முன்வைக்கப்பட்டிருந்த நிலையில், அதற்கு நிதி பற்றிய குழுவின் அனுமதியும் கிடைக்கப்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# தேயிலை உரத்துக்கான மானியம் அதிகரிப்பு

தேயிலை பயிர்ச்செய்கைக்கான உர மானியமாக அரசாங்கம் வழங்கத் தீர்மானித்த 2,000 ரூபா தொகையை 4,000 ரூபாவாக அதிகரிக்க விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு தீர்மானித்துள்ளது.

தேயிலை பயிர்ச்செய்கையாளர்களை ஊக்குவிப்பதற்காக 2,000 ரூபா மானியம் வழங்குவதற்கு முன்னர் தீர்மானிக்கப்பட்ட போதிலும், தேயிலை உற்பத்தியை அதிகரிக்க அந்தத் தொகை போதுமானதாக இல்லை எனக் கண்டறியப்பட்டுள்ளதாக விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி, எதிர்வரும் பருவத்திலிருந்து இந்த உர மானியம் வழங்கப்படவுள்ளது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# மொட்டின் மீளெழும் முயற்சி

தாங்களே ஜனாதிபதியாக்கிய ரணில் விக்கிரமசிங்கவுக்கு, அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஆதரவளிப்பதில்லை, அவருக்கு எதிராக ஒரு வேட்பாளரைத் தங்கள் கட்சியே நிறுத்தும் என்ற தீர்மானத்திற்கு பொதுஜன பெரமுன - மொட்டுக் கட்சி - வந்துவிட்டது.

இது முரண்பாட்டினால் ஏற்பட்ட பிணக்கின் விளைவா அல்லது இணக்கத்துடன் ஒத்திசைந்து அரங்கேற்றப்படும் நாடகமா என்ற சந்தேகம் பல வட்டாரங்களிலும் ஐயுறவோடு பேசப்பட்டாலும் நிலைமை அப்படி அல்ல.

இரண்டு தரப்புகளுமே இப்போது சுட்ட மண் என்ற நிலையில்தான் உள்ளன. இனி ஒட்டுவது நடவாது என்பதுதான் யதார்த்தம் போலும்.

மொட்டுக் கட்சியின் சார்பில் அமைச்சர்களாக இருக்கும் காஞ்சன விஜயசேகர, பிரசன்ன ரணதுங்க, பந்துல குணவர்தன மற்றும் மஹிந்தானந்த அளுத் கமகே, எஸ்.பி.திஸநாயக்கா போன்ற மொட்டுக் கட்சியினர் நேற்றைய தீர்மானத்திற்கு உடன்பட்டவர்கள் அல்லர்.

மொட்டுக் கட்சி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்று நேற்றைய கூட்டத்தில் இவர்கள் பிடிவாதம் பிடித்து நின்றவர்கள். அவர்களின் பிரச்சினை வேறு.

எப்படியும் அமைச்சர் பந்தா, பதவிச் சுகம், பவிசு, அதிகாரம் எல்லாம் அவர்களுக்கு அவசியம். அவை இல்லாமல் அவர்களினால் வாழவும் முடியாது, அரசியல் செய்யவும் முடியாது.

மொட்டுக் கட்சி இம்முறை நிறுத்தக் கூடிய ஜனாதிபதி வேட்பாளர் வெற்றி வாய்ப்பை பெறக் கூடியவர் அல்லர். மறுபுறத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் சஜித் பிரேமதாஸவோ, தேசிய மக்கள் சக்தியின் அநுர குமார திஸநாயக்கவோ தங்களை அரவணைக்கவே மாட்டார்கள், ஆகையினால் அடுத்த ஜனாதிபதியின் பதவிக்காலம் முழுவதும் தாங்கள் அதிகாரத்தில் இருப்பதாயின் ரணில் விக்கிரமசிங்கவுடன் ஒட்டி, அவரை ஜனாதிபதியாக்கினால்தான் அது சாத்தியம் என்பது இவர்களது கவலை. எதிர்பார்ப்பு.

ஆனால் அதிகாரத்திற்காக - பதவிக்காக - கட்சியை கைவிட்டு ஓடுவோரை, கட்சி முழுதாகக் கைவிட்டு விட்டு, புதிய இளம் தரப்பு ஒன்றை மீள உருவாக்கி, மீண்டும் உத்வேகத்துடன் வருவோம் என்று மொட்டு கட்சியின் மேலிடம் எண்ணுகின்றது. கட்சியின் மூத்த தலைவரான மஹிந்த ராஜபக்ஷவின் முகத்தைத் காட்டித்தான் கட்சியை மீளுருவாக்கம் செய்து, பலப்படுத்த முடியும் என்ற அடிப்படை புரிந்தவர்கள் அவர்கள்.

அதைச் செய்வதாயின் விரைந்து, காலம் தாழ்த்தாது, முன்னெடுக்க வேண்டும், தாமதிக்கக்கூடாது என்று அவர்கள் கணக்கிடுகின்றனர்.

அதனால்தான் மொட்டுக் கட்சியை மீண்டும் ஆரம்பத்தில் இருந்து புத்துயிர்ப்பூட்டி புத்தெழுச்சியை உண்டு பண்ண வேண்டும் என்று விரும்பும் அவர்கள், அதற்கான முக்கிய காய் நகர்த்தலாகவே ரணிலுக்கு வழங்கும் ஆதரவை விலக்கித் தனித்துப் போகும் முடிவை எட்டி இருக்கின்றார்கள் என்று தெரிகின்றது.

ஜனாதிபதி ரணில் மீண்டும் பதவிக்கு வருவதற்கு தமது கட்சி மூலம் உதவி விட்டு, கட்சித் தலைமை தங்கி இருக்க, கட்சியை உடைத்து ரணில் அரசியல் செய்வார் என்பது மொட்டுக் கட்சியின் இளம் தலைமைக்கு நன்கு தெரியும்.

அதனால்தான் அதற்கு இடமளிக்காமல், கட்சியை ரணிலின் பிடியில் இருந்து விடுவிக்கும் முதல் நடவடிக்கையாக இந்தக் காய் நகர்த்தலை மொட்டுக் கட்சித் தலைமை செய்திருக்கின்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இது எதிர்பாராத அதிர்ச்சியாக இருக்கக்கூடும். இந்தப் பின்னடைவு நிலையை அடுத்து மொட்டுத் தரப்பை தள்ளி வைத்து, அரசியல் செய்யும் கட்டாயத்துக்கு ஜனாதிபதி ரணில் தள்ளப்படக்கூடும் என்பதும் தெளிவு.

ஆயினும், தனித்துப் போகும் முடிவை எடுக்காவிட்டால், ரணிலின் பிடியிலிருந்தும், அதிகாரப் பேராசைக்கு பின்னால் ஓடும் கட்சி உறுப்பினர்களில் இருந்தும் மொட்டுக் கட்சியைக் காப்பாற்றி மீட்டெடுப்பது முடியாத காரியம் என்பதால் இந்த முடிவுக்கு மொட்டு கட்சி வந்திருப்பதாகவே கருத வேண்டும்.



# அரசு திட்டங்களை விரைந்து அமுல்படுத்த வேண்டும்: பா.ஜ.க. முதல்வர்கள் கூட்டத்தில் மோடி வலியுறுத்தல்

அரசின் நலத்திட்டங்களை விரைவாக அமல்படுத்த வேண்டும் என பா.ஜ.க. முதல்வர்கள், துணை முதல்வர்கள் கூட்டத்தில் பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

மக்களவைத் தேர்தலில் வெற்றிபெற்று தொடர்ந்து 3 ஆவது முறையாக மத்தியில் ஆட்சி அமைந்த பிறகு, முதல் முறையாக பா.ஜ.க. ஆளும் மாநில முதல்வர்கள் மற்றும் துணை முதல்வர்கள் கூட்டம் டில்லியில் உள்ள கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்றது. பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மத்திய அமைச்சர்கள் அமித் ஷா, ராஜ்நாத் சிங், பா.ஜ.க. தலைவர் ஜே.பி.நட்டா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

ராஜஸ்தான் முதல்வர் பஜன்லால் சர்மா, திரிபுரா முதல்வர் மாணிக் சாகா, மத்திய பிரதேச முதல்வர் மோகன் குமார் யாதவ், மணிப்பூர் முதல்வர் என்.பிரேன் சிங், உத்தர பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத், குஜராத் முதல்வர் பூபேந்திர படேல், உத்தராகண்ட் முதல்வர் புஷ்கர் சிங் தாமி, அசாம் முதல்வர் ஹிமந்த பிஸ்வா சர்மா, கோவா முதல்வர் பிரமோத் சாவந்த், சத்தீஸ்கர் முதல்வர் விஷ்ணு தியோ சாய், அருணாச்சல பிரதேச முதல்வர் பேமா காண்டு மற்றும் ஒடிசா முதல்வர் மோகன் சரண் மாஜி ஆகியோர் இக்கூட்டத்தில் பங்கேற்றனர்.

மகாராஷ்டிர துணை முதல்வர் தேவேந்திர பட்னாவிஸ், உத்த பிரதேச துணை முதல்வர் கேசவ் பிரசாத் மவுரியா, நாகாலாந்து துணை முதல்வர் ஒய்.பட்டோன், பிஹார் துணை முதல்வர்கள் சாம்ராட் சவுத்ரி மற்றும் விஜய்குமார் சின்ஹா மற்றும் ராஜஸ்தான் துணை முதல்வர் தியா குமாரி உள்ளிட்டோரும் இதில் பங்கேற்றனர்.

இக்கூட்டத்தில் மாநில அரசுகள் தாங்கள் செயல்படுத்தி வரும் நலத்திட்டங்கள் குறித்து விளக்கமாக எடுத்துரைத்தன. மேலும் மத்திய அரசின் அனைவருக்கும் வீடு, அனைத்து வீடுகளுக்கும் சுத்தமான குடிநீர் குழாய் இணைப்பு உள்ளிட்ட திட்டங்களின் செயல்பாடுகள் குறித்தும் விரிவாக விவாதிக்கப்பட்டது. மக்களவைத் தேர்தல் முடிவுகள் குறிப்பாக சில மாநிலங்களில் பின்னடைவு ஏற்பட்டது குறித்தும் விவாதிக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் பிரதமர் நரேந்திர மோடி பேசும் போது, "அரசின் நலத்திட்டங்களை விரைவாக அமல்படுத்த வேண்டும். இதன்மூலம் நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த கவனம் செலுத்த வேண்டும். 2047 ஆம் ஆண்டுக்குள் வளர்ந்த இந்தியா (விக்சித் இந்தியா) இலக்கை எட்ட, மாநிலங்கள் வளர்ச்சி அடைய வேண்டியது அவசியம்" என்று வலியுறுத்தினார்.



# அ.தி.மு.க. அரசின் சாதனைகளை மக்களிடம் கொண்டு சேர்க்கவில்லை

## இ.பி.எஸ். ஆதங்கம்

"அ.தி.மு.க. ஆட்சியின் சாதனைகளை கட்சி நிர்வாகிகள் மக்களிடம் கொண்டு போய் சேர்க்கவில்லை."

– இவ்வாறு நிர்வாகிகளுடனான ஆலோசனைக் கூட்டத்தில் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

தமிழகத்தில் மக்களவைத் தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணி 39 தொகுதிகளிலும் தோல்வி அடைந்தது. இந்நிலையில் மக்களவைத் தொகுதி வாரியாக கட்சி நிர்வாகிகளிடம் மக்களவைத் தேர்தல் தோல்வி குறித்து கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, 2 ஆம் கட்ட ஆலோசனை நடத்தினார்.

நேற்று திண்டுக்கல் மற்றும் திருவள்ளூர் ஆகிய மக்களவைத் தொகுதிகளைச் சேர்ந்த மாவட்டச் செயலாளர்கள் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் மற்றும் வேட்பாளர்கள் ஆகியோருடன் ஆலோசனை நடத்தினார்.

திண்டுக்கல் மக்களவைத் தொகுதி அ.தி.மு.க. நிர்வாகிகள் பேசும்போது,

"நாங்கள் தேர்தலில் கடுமையாகத்தான் உழைத்தோம். ஆனால், தி.மு.கவின் பணநாயகம் வென்றுவிட்டது. அதனால் அ.தி.மு.க. கூட்டணி வேட்பாளர் தோல்வியைச் சந்தித்தார்." என்று தெரிவித்தனர்.

பின்னர் பேசிய பழனிசாமி, "மருத்துவ மாணவர் சேர்க்கையில் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 7.5 வீத இட ஒதுக்கீடு உள்ளிட்ட ஏராளமான திட்டங்களை அ.தி.மு.க. அரசு தான் செயல்படுத்தியது. அதிமுக அரசின் சாதனைகளை நிர்வாகிகள் மக்களிடம் கொண்டு போய்ச் சேர்க்கத் தவறிவிட்டனர்.

அதனால்தான் நாம் இந்தத் தேர்தலில் தோல்வியை சந்தித்து இருக்கிறோம். எனவே, நிர்வாகிகள் அனைவரும் மாதந்தோறும் ஆலோசனை கூட்டத்தை நடத்த வேண்டும். அ.தி.மு.க. அரசின் சாதனைகளை மக்களிடம் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டும். இளைஞர்களை அ.தி.க. அளவில் கட்சியில் சேர்க்க வேண்டும். உள்ளாட்சி தேர்தலை மனதில் வைத்து பணியாற்ற வேண்டும். உள்ளாட்சி தேர்தலில் வெற்றி பெற்றால் தான் 2026 சட்டப்பேரவை தேர்தலில் நாம் ஆட்சியை பிடிக்க முடியும்." என்று அறிவுறுத்தினார்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் அவைத் தலைவர் தமிழ் மகன் உசேன் முன்னாள் அமைச்சர்கள் நத்தம் விசுவநாதன், கே.பி.முனுசாமி, எஸ்.பி.வேலுமணி, திண்டுக்கல் சீனிவாசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.





# காசாவில் தொடரும் இஸ்ரேலின் தாக்குதல்களால் 10,000 மாணவர்கள், 400 ஆசிரியர்கள் உயிரிழப்பு

காசா பகுதியில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் இதுவரை 10 ஆயிரம் மாணவர்கள் மற்றும் 400 ஆசிரியர்கள் பலியாகியுள்ளனர் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேற்படி தகவலை பலஸ்தீன கல்வி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அந்தவகையில், காசாவில் உள்ள 76 சதவீதத்திற்கும் அதிகமான பள்ளிகள் செயல்படுவதற்கு முழு புனரமைப்பு தேவை என்று ஐ.நா தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், பலஸ்தீனிய கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சர் அம்ஜத் பர்ஹாம் காசா பகுதியைச் சேர்ந்த 39 ஆயிரம் உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் இந்த ஆண்டு தேர்வுகளில் பங்கேற்கவில்லை என கூறியுள்ளார்.

குறிப்பாக, இஸ்ரேலிய அரசினால் 117 பள்ளிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் முற்றாக அழிக்கப்பட்டுள்ளதுடன், 332 பள்ளிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் பகுதியளவில் அழிக்கப்பட்டுள்ளன என தெரியவந்துள்ளது.

கடந்த ஆண்டு, ஒக்டோபர் 7 அன்று தொடங்கிய காசா மீதான இஸ்ரேலின் போரில் 39 ஆயிரத்து 363 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 90 ஆயிரத்து 923 பேர் காயமடைந்துள்ளனர் என கூறப்படுகின்றது.

மேலும், ஹமாஸ் தலைமையிலான தாக்குதல்களின் போது இஸ்ரேலில் 1,139 பேர் கொல்லப்பட்டனர். 200 இற்கும் மேற்பட்டோர் சிறைபிடிக்கப்பட்டுள்ளனர் என குறிப்பிடத்தக்கது.

# வடகொரியாவில் வெள்ளம் அவசரநிலை பிரகடனம்









வடகொரியாவில் கனமழையால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு காரணமாக அங்கு அவசர நிலை பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான மக்களைக் கருத்தில் கொண்டு வடகொரியத் தலைவர் கிங் ஜாங்-உன் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளார் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடந்த சனிக்கிழமையன்று பெய்த கனமழையால் வட கொரிய-சீன எல்லையில் உள்ள ஒரு நதி ஆபத்தான அளவைத் தாண்டியதுடன் கடுமையான நெருக்கடியை உருவாக்கியது என்று அதிகாரபூர்வ கொரிய மத்திய செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

வடகொரிய தலைவரின் வாகன அணிவகுப்பு வெள்ளம் சூழ்ந்த சாலையில் பயணிப்பதைக் காட்டும் புகைப் படத்தையும் வெளிநாட்டு ஊடகங்கள் வெளியிட்டிருந் தன.

சினுஜு மற்றும் உய்ஜு பகுதிகள் வெள்ளத்தால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன, மேலும் வெள்ளத்தால் தனிமைப் படுத்தப்பட்ட 5,000 இற்கும் மேற்பட்ட மக்கள், ஜனாதிபதி கிம் ஜாங் உன்னின் மேற்பார்வையில் விமானங்கள் மற்றும் பிற வெளியேற்றப் பணிகளில் மீட்கப்பட்டனர் என அரச ஊடகங்கள் நேற்று செய்தி வெளியிட்டுள்ளன.




# கனகாம்பிகைகுளம் அடாத்தாகப் பிடிக்கப்பட்டமையை கண்டித்துப் பொது மக்கள் நேற்று அங்கு ஆர்ப்பாட்டம்

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கனகாம்பிகை குளத்தின் ஒரு பகுதி சட்டவிரோதமாகத் தனிநபர் ஒருவரால் மண் நிரப்பட்டு அடாத்தாகப் பிடிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பொது மக்களாக் நேற்று எதிர்ப்பு ஆருப்பாட்டம் ஒன்றை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை 10 மணியளவில் ஏ9 வீதியில் கனகாம்பிகைகுளம் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பகுதியில் ஒன்று கூடிய பொது மக்கள் குளம் மண் நிரப்பட்டு அடாத்தாக பிடிக்கப்பட்டதனை கண்டித்து ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டனர்.

கிளிநொச்சி கனகாம்பிகை குளத்தின் ஏ9 வீதியோடு அண்டியதாக சுமார் ஒரு ஏக்கர் பரப்பளவு குளத்தை தனிநபர் ஒருவர் மண் நிரப்பி பிடித்துள்ள நிலையில் அந்தக் குளத்தின் பின்பகுதி முல்லைத்தீவு மாவட்டம் ஓட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்ட பகுதியில் சுமார் 20 ஏக்கர் வரையான குளத்தின் பகுதிகளும் வேலியிட்டுப் பிடிக்கப்பட்டுள்ளன.

இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் பொருட்டே ஒன்று சேர்ந்த பொதுமக்கள் ‘குளம் எங்களின் சொத்து’, ‘அனுமதிக்க மாட்மோம், அனுமதிக்கமாட்டோம் குளத்தை பிடிப்பதனை அனுமதிக்கமாட்டோம்’, ‘விவசாயிகளின் வாழ்வாதாரத்தில் மண் அள்ளிப் போடாதே!’ எனப் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளையும் ஏந்தியிருந்தனர்.

சம்பவ இடத்திற்கு கிளி நொச்சி மாவட்ட அரச அதிபர், முரளிதரன், கரைச்சி பிரதேச செயலாளர் முகுந்தன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் ஆகியோர் சென்றிருந்தனர். அங்கு பொது மக்களுடன் கலந்துரையாடிய பின்னர் குளத்தை அடாத்தாகப் பிடித்தவரின் ஆவணங்களைப் பரிசோதித்த போது அவர்களிடம் அதற்கான எவ்வித ஆவணங்களும் இன்மையால் உடனடியாக இரண்டு நாள்களுக்குள் நிரப்பட்ட மண்ணை அகற்றி குளத்தை வழமைக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மாவட்ட அரசாங்க அதிபர் முரளிதரன் பொலீஸ் பொறுப்பதிகாரிக்கு வழிகாட்டுதல் வழங்கினார்.

குளம் ஆக்கிரமிக்கப்படுவதன் மூலம் விவசாயிகள் மட்டுமல்ல சுற்றியுள்ள பொது மக்கள் மற்றும் சுற்றுப்புறச் சூழல் கால்நடைகள் என எல்லாவற்றுக்கும் பெரும் பாதிப்பு ஏற்படும். இவ்வாறான சட்டவிரோத நடவடிக்கைகள் அனுமதித்தால் ஒருவர், இருவராகி, இருவர் பலராகி எதிர்காலத்தில் குளமே காணமல் போய்விடும். இவ்வாறு பல குளங்களுக்கு நடந்துள்ளது. எனவே இவ்வாறான நடவடிக்கைகளை ஒரு போதும் அனுமதிக்க முடியாது. – என்றார்.








## தபால் மூல வாக்களிப்பு:

# விண்ணப்பங்களை ஓகஸ்ட் 5 இற்கு முன்னர் சமர்ப்பித்தல் வேண்டும்




தபால்மூல வாக்களிப்புக்கு தகுதி பெறும் வாக்காளர்கள் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை ஓகஸ்ட் 05 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரிடம் ஒப்படைத்தல் வேண்டும் எனவும் நிச்சயிக்கப்பட்ட திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் மீள்பரிசீலனை இல்லாமல் இரத்து செய்யப்படும் எனவும் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

தபால்மூல வாக்களிப்பு குறித்து தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் –

"2024 ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கு 2024 ஆம் ஆண்டுக்கான புதிய தேருநர் இடாப்பு (வாக்காளர் இடாப்பு) பயன்படுத்தப்படும். தபால் மூல வாக்காளரின் நலனுக்காக நாடளாவிய ரீதியில் உள்ள சகல தேர்தல் தொகுதிகளுக்கு உரிய 2024 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பு 2024.07.26 ஆம் திகதி முதல் அலுவலக நேரத்தின் போது அனைத்து மாவட்ட செயலாளர் காரியாலயம் (கச்சேரி),பிரதேச செயலாளர் காரியாலயம்,கிராம சேவகர் அலுவலகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

மேற்குறிப்பிடப்பட்ட இடங்களுக்கு மேலதிகமாக அரச நிர்வாகம், உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாண சபைகள், உள்ளூராட்சிமன்றங்கள் அமைச்சு, தொழில் திணைக்களம், பதிவாளர் ஆணையாளர திணைக்களம், தபால் தலைமையகம், கடற்றொழில் மற்றும் நீர்வழங்கல் அமைச்சு, நகர அபிவிருத்தி ஆகிய அரச நிறுவனங்களின் காரியாலயங்களில் உரிய தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும்.

அத்துடன், தேர்தல்கள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ வலைத்தளம் ஊடாக மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும். அனைத்து மாவட்டங்களின் தபால் மூல வாக்காளர்களின் விண்ணப்பங்கள் அந்தந்த மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

தபால்மூல வாக்களிப்பு வசதியை பெற்றுக் கொள்வதற்காக பூரணப்படுத்தப்பட வேண்டிய விண்ணப்ப படிவத்தை மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன் தேர்தல்கள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ வலைத்தளத்தின் ஊடாக விண்ணப்பங்களை தரவிறக்கம் செய்துக் கொள்ள முடியும்.

தபால் மூல வாக்களிப்புக்கு தகுதி பெற்றுள்ள வாக்காளர்கள் 2024.08.05 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னரான திகதியின் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரிடம் ஒப்படைத்தல் வேண்டும். விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் இறுதி தினத்தற்கு அதாவது 2024.08.05 ஆம் திகதி நள்ளிரவு 12 மணிக்கு முன்னர் உரிய மாவட்ட தேர்தல் காரியாலயத்துக்கு கிடைக்கப் பெற வேண்டும்.

2024.08.05 ஆம் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் மீள் பரிசீலனை செய்யாமல் இரத்து செய்யப்படும்.ஆகவே விரைவாக விண்ணப்பங்களை உறுதிப்படுத்தும் அலுவலர் ஊடாக உரிய மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலருக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது."– என்று குறிப்பிடப்பட்டுள்ளது.





# தேசபந்து தென்னகோன் பதவியை இராஜினாமா செய்ய கோரி மகஜர்

தேசபந்து தென்னகோனுக்கு எதிராக உயர் நீதிமன்றம் விதித்துள்ள தடையுத்தரவுக்கு அமைய பொது மக்களின் வரிப்பணத்தை பயன்படுத்தி தொடர்ந்தும் அவரை பொலிஸ் திணைக்களத்தில் வைத்து போசிப்பதால் எந்த பயனும் கிடையாது எனவும், உடனடியாக அவர் தனது பதவியை இராஜினாமா செய்ய வேண்டும் என வலியுறுத்தியும் மக்கள் போராட்ட இயக்கத்தின் ஊடக ஒருங்கிணைப்பாளர் சந்துன் எஸ்.ராஜபக்ஷ உள்ளிட்ட தரப்பினர் நேற்று பொலிஸ் தலைமையகத்தில் மகஜர் ஒன்றை கையளிக்கச் சென்றிருந்தனர்.

அத்துடன், அப்பகுதியில் அவர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுக்க முற்பட்ட போது பொலிஸார் அதற்கு கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தினர். அவரிடமிருந்த மகஜரையும் பொலிஸார் பலவந்தமாக பறித்தெடுத்தனர்.

# ஜனாதிபதித் தேர்தலில் சம்பிரதாய அரசியலில் ஈடுபட்டால் 3 ஆவது உள்நாட்டுப் போர் ஏற்படுவதைத் தடுக்க முடியாது

## நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவிப்பு

"அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் சம்பிரதாய அரசியல் சித்தாந்தங்களை பின்பற்றினால் நாட்டில் மீண்டும் உள் நாட்டு யுத்தம் ஏற்படும் அபாயம் இருக்கின்றது. அவ்வாறானதொரு நிலை ஏற்பட்டால் அதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினர் பொறுப்பேற்க வேண்டும்."

– இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயேநாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

"எதிர்வரும் செப்டெம்பர் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் இந்த நாட்டின் 09 ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான முக்கியமான தேர்தலாக அமையும். தற்போது பழைய அரசியல் கட்சிகள் சம்பிரதாய முறையில் அரசியல் பிரசாரத்தைத் தொடர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும், நம் நாட்டின் வரலாற்றில், பல கிளர்ச்சிகளும் உள்நாட்டுப் போர்களும் நடந்துள்ளன. கடந்த ஆட்சிக்கு எதிராக உள்நாட்டுப் போராட்டமும் நடந்தது. எனவே, மீண்டும் அதேபோன்று மூன்றாவது உள்நாட்டு யுத்தம் போன்ற நிலைமை உருவாகும் வகையில் மக்கள் தமது வாக்குகளைப் பயன்படுத்துவார்களா? அல்லது, அவ்வாறானதொரு சூழ்நிலை ஏற்படாமல் தடுப்பதற்கு செப்டம்பர் 21ஆம் திகதி தமது வாக்குகளைப் பயன்படுத்துவார்களா என்ற கேள்வி இலங்கை மக்கள் முன்னிலையில் உள்ளது.

அவர்கள் சம்பிரதாயபூர்வமாக தமது அரசியல் சித்தாந்தங்களின்படி செயற்பட்டாலோ இல்லாவிடில் இலங்கை சமூகத்தில் நிலவும் குலம்,சாதி என்பவற்றை வைத்து அரசியல் நோக்கில் செயற்பட்டாலோ மூன்றாவது உள் நாட்டுப் போரொன்று வெடிப்பதற்கான பொறுப்பை சம்பந்தப்பட்ட தரப்பினர் ஏற்க வேண்டும் என்பதை இந்நாட்டு அரசியல் கட்சிகள் நினைவில் கொள்ள வேண்டும்.

கடந்த காலத்தில் நாடு வங்குரோத்தான போது, நாட்டைக் கட்டியெழுப்பும் பொறுப்பை எதிர்க்கட்சிகள் ஏற்கவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியின் தனி உறுப்பினராக அப்போது நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த ரணில் விக்கிரமசிங்க, நாட்டின் எதிர்காலத்தை கட்டியெழுப்பும் பொறுப்பை ஏற்றார். 2022 ஜூலை 22 ஆம் திகதி, 08 ஆவது நிறைவேற்று ஜனாதிபதியாக




நாடாளுமன்றத்தினால் நியமிக்கப்பட்டு நாட்டின் எதிர்காலத்தைக் கட்டியெழுப்பும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.வீழ்ச்சியடைந்த நாட்டை மீண்டும் கட்டியெழுப்பப் பின்னர் பல மறுசீரமைப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டன. பொருளாதார பரிமாற்றச் சட்டம் அவற்றில் விசேடமானது. அதை ஒதுக்கி எந்த அரசியல் கட்சியும் செயல்பட முடியாது. 2027 இல், நம் நாடு வங்குரோத்து நாடாக அறிவிக்கப்பட்டு 05 ஆண்டுகள் நிறைவடையும்.

பொருளாதார பரிமாற்றச் சட்டத்தின்படி, 2027ஆம் ஆண்டுக்குள் நாட்டின் பொருளாதார வளர்ச்சி 5 வீதமாக இருக்க வேண்டும். பொருளாதார பரிமாற்றச் சட்டத்தின் மூலம் இதுவரை நாட்டை ஆட்சி செய்த கட்சிகளுக்கு இல்லாதிருந்த ஒரு அம்சமான பொறுப்புக்கூறல் இந்த சட்டத்தின் ஊடாக உருவாக்கப்பட்டுள்ளது. எனவே, இந்தச் சட்டத்தின்படியே எந்தக் கட்சியும் தனது கொள்கைகளை முன்வைக்க வேண்டும். மேலும், உள்நாட்டு மற்றும் சர்வதேச வர்த்தகம், தொழில்துறை முறைமை, ஆசியா மற்றும் உலகத்துடன் போட்டியிடும் செயல்முறையை உள் ளடக்கிய வேகமான பொருளாதாரத்தை உருவாக்குவதே இந்த புதிய பொரு ளாதார பரிமாற்றச் சட்டத்தின் நோக் கமாகும்.

இன்னும் சில அரசியல் கட்சிகள் மக்களை ஏமாற்றும் சம்பிரதாய முறையையே பின்பற்றி வருகின்றன. வரவு செலவுத்திட்ட அலுவலகச் சட்டம் மற்றும் பொருளாதார மாற்றச் சட்டம், அரச கடன் முகாமைத்துவச் சட்டம் போன்ற முக்கியமான சட்டங்களில் உள்ள கொள்கைகளை மீறி தங்கள் கொள்கைகளை பொதுமக்களிடம் முன்வைக்கின்றனர். இதனால் இலங்கையை மீளக் கட்டியெழுப்ப முடியாத நிலை ஏற்படும். உதாரணமாக, பொருளாதார பரிமாற்றச் சட்டம், வரவுசெலவுத் திட்ட அலுவலகச் சட்டம் மற்றும் அரச கடன் முகாமைத்துவச் சட்டம் ஆகிய சட்டங்களுக்கு அப்பால் ஒரு அரசியல் பாத்திரம் இருக்க முடியாது. ஆனால், 225 உறுப்பினர்களும் புதிய பொருளாதார பரிமாற்றச் சட்டத்தை நாடாளுமன்றத்தில் ஏற்றுக்கொண்டாலும், அவர்கள் வெளியே வந்து வேறு விடயங்களைக் கூறுவது வருத்தமளிக்கிறது. நாட்டின் நிலைமையை புரிந்துகொண்டு அவ்வாறு செயற்பட வேண்டாம் என அனைத்து தரப்பினரையும் கேட்டுக் கொள்கின்றேன். சாதி, மத,அரசியல் கொள்கைகளை ஒதுக்கி வைத்துவிட்டு நாட்டைக் கட்டியெழுப்பும் தேசியத் திட்டத்துக்கு இணைந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தமது தனிப்பட்ட கொள்கை எதுவாக இருந்தாலும், அதனை அவ்வாறே வைத்துக்கொண்டு, நாட்டைக் கட்டியெழுப்பும் கொள்கைக்குப் பாதிப்பை ஏற்படுத்தாமல், நாட்டைக் கட்டியெழுப்பும் நீண்ட கால வேலைத்திட்டத்திற்கு இணங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அனைத்துத் தரப்பினரிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சிலர் ஊழல் குறித்து பொய்யான கருத்துகளை வெளியிடுகின்றனர். ஊழலைக் கட்டுப்படுத்த நீதித்துறையும் பொலிஸாரும் உள்ளனர். ஊழலை குறைக்க அந்த துறைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், ஆசியாவிலேயே மிகவும் சக்திவாய்ந்த ஊழல் எதிர்ப்புச் சட்டம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் செயற்படுத்தப் பட்டுள்ளது. இந்த நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டுமாயின், 06 முதல் 12 அல்லது 15 வருடங்கள் வரை ஒரு தேசிய வேலைத்திட்டத்தின்படி நாம் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். "– என்றார்.



# மன்னாரில் பட்டதாரியான இளம் தாய் ஞாயிறன்று பரிதாபமாக உயிரிழப்பு

## மன்னார் வைத்தியசாலை மீது குற்றச்சாட்டு

(மன்னார் நிருபர்)

மன்னார் – மதவாச்சி பிரதான வீதி, தம்பனைக்குளம் பகுதியைச் சேர்ந்த பட்டதாரியான இளம் தாய் ஒருவர் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்தார்.

இந்த சம்பவமானது நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றுள்ளது.

மரணமடைந்த இளம் தாய் பட்டப்படிப்பை நிறைவு செய்த மரியராஜ் சிந்துஜா (வயது 27) எனத் தெரிய வந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:-

இறந்த இளம் தாய்க்கு முதலாவது ஆண் குழந்தை மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் கடந்த 09ம் திகதி பிறந்துள்ளது. 11 ஆம் திகதி மருத்துவமனையில் இருந்து தாய் சேய் நலமாக வெளியேறியுள்ளார்கள்.

ஏழு நாள்களின் பின்னர் முருங்கன் வைத்தியசாலையில் தையல் வெட்டுமாறு கூறியதையடுத்து கடந்த 16 ஆம் திகதி முருங்கன் வைத்தியசாலையில் தையல் வெட்டப்பட்டதாக இறந்த பெண்ணின் தாயார் தெரிவித்தார்.

தனது மகளை அவரே மருத்துவமனையில் வைத்துப் பராமரித்து வந்துள்ளார்.

அதன் பின்னர் கடந்த சனிக்கிழமை தாய்க்கு குருதிப் பெருக்கு ஏற்பட்டதை அடுத்து அன்று இரவு அம்புலன்ஸ் மூலம் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு சென்று ஓ.பி.டி. பதிவுகளின் பின்னர் உரிய நோயாளர் விடுதியில் அனுமதிக்கப்பட்டார்.

குருதி ஓட்டம் கட்டுப்படாமல் தொடர்ச்சியாக கசிந்து கொண்டே இருந்ததன் காரணத்தினால் விடிய காலை ஆறு முதல் ஏழு மணி அளவில் சுய நினைவை அவர் இழந்ததாகத் தாயார் தெரிவித்தார்.

அதன்பின் அவசர சிகிச்சைக்காக எடுத்துச் செல்லப்பட்ட போது நண்பகல் 11 மணியின் பின்னர் இளம் தாய் மரணித்து விட்டார் எனச் செய்தி எமக்குக் கிடைத்தது.

குருதிப் பெருக்கு காரணமாக மருத்துவமனைக்கு கொண்டு சென்ற அன்று இரவு வைத்தியர்கள் பார்வையிட்டு இருந்தால் தனது மகளை காப்பாற்றியிருக்கலாம் என இந்த பெண்ணின் தாய் கண்ணீர் மல்கத் தெரிவித்தார்.

இறந்த இளம் தாயான சிந்துஜா சிறிஜயவர்த்தனபுரபல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை நிறைவு செய்த போதும் பட்டமளிப்பு நிகழ்வு இன்னும் நடைபெறவில்லை. குறித்த பட்டமளிப்பு நிகழ்வு இன்னும் ஒரு சில மாதங்களில் நடைபெறவுள்ள நிலையில் இவ்வாறு சோக சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கனவுகளோடு படித்து திருமண வாழ்க்கைக்குள் நுழைந்து உயிரிழந்த இளம் தாய் இனி உயிருடன் மீளப் போவதில்லை. ஆனால் இறுதி நேரத்தில் கூடவே இருந்து பராமரித்து வந்த வரும் இறந்த பெண்ணின் தாயுமானவர் தெரிவித்த குற்றச்சாட்டில் ஏதேனும் உண்மை இருக்கிறதா? என்று நீதியான விசாரணை செய்து உண்மைத் தன்மையை வெளிப்படுத்த சுகாதாரத் துறையினர் முன்வர வேண்டும் என கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் அஸாத் எம் ஹனீபா வை வினவிய போது –

இந்தப் பெண்ணின் மரணம் தொடர்பாக விசேட சட்ட வைத்திய அதிகாரியின் சடலப் பரிசோதனை நேற்றைய தினம் முன்னெடுக்கப்பட்டது.

அதிக குருதிப் பெருக்கு காரணமாக மரணம் நிகழ்ந்துள்ளதாகக் கூறப்பட்டது .மேலதிக பரிசோதனைகளுக்காக உடற்பாகங்கள் பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பரிசோதனை அறிக்கை வெளிவந்தால் மரணத்திற்கான காரணத்தை முழுமையாக அறிய முடியும்.

எப்படி இருந்தாலும் வைத்தியசாலை தரப்பினர் மீது குற்றம் நிரூபிக்கப்பட்டால் உரிய சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். – என அவர் மேலும் தெரிவித்தார்.

# வட, கிழக்கு மக்கள் ரணிலுக்கே ஆதரவு; எஸ்.பி. திஸாநாயக்க எம்.பி. கூறுகின்றார்

"ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்காவிடின் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிப் பெறுவார். வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் ஜனாதிபதிக்கே ஆதரவு வழங்குவார்கள்."

– இவ்வாறு ஆளும் தரப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்க வேண்டும் அல்லது அவருக்கு முழுமையான ஆதரவை வழங்க வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் பலமுறை எடுத்துரைத்துள்ளோம்.

கட்சியின் ஒரு தரப்பினர் மாத்திரமே



கட்சியின் உறுப்பினரை ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்க வேண்டும் என்று குறிப்பிட்டுக் கொள்கிறார்கள்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர்கள் ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளார்கள்.

அத்துடன், கட்சியின் தொகுதி அமைப்பாளர்களும் இதே நிலைப்பாட்டில் தான் உள்ளார்கள். ஆகவே கட்சியின் பெரும்பான்மை நிலைப்பாட்டுக்கு மதிப்பளித்து சிறந்த தீர்மானம் எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளோம்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு பொதுஜன பெரமுன ஆதரவு வழங்காவிடின் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தேர்தலில் வெற்றி பெறுவார்.

அவ்வாறான நிலை ஏற்பட்டால் 2022 ஆம் ஆண்டு நிலைவரமே மீண்டும் ஏற்படும். வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவார்கள். ஆகவே பொதுஜன பெரமுன சிறந்த தீர்மானத்தை எடுக்க வேண்டும்.

தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும்,எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையில் போட்டி நிலவும்.அரகலயவின் போது மக்கள் மத்தியில் ஜே.வி.பியினருக்கு இருந்த செல்வாக்கு தற்போது முழுமையாக வீழ்ச்சியடைந்து விட்டது. அனுரகுமார திஸாநாயக்கவின் பேச்சு கேட்பதற்கு அருமையாக இருக்கும், ஆனால் நடைமுறைக்கு சாத்தியமற்றது."- என்றார்.

# இன்றைய ராசி பலன்கள் - 30.07.2024

## மேஷம்

இன்று நீங்கள் உங்களின் அறிவுத் திறனை இழக்க நேரும். உங்கள் பேச்சில் பதற்றமும் வேதனையும் பிரதிபலிக்கும். பிரார்த்தனை நல்ல பலனைத்தரும்.

பணியில் மந்த நிலை காணப்படும். முறையான திட்டமிடல் இருந்தால் நீங்கள் சிறப்பாக செயலாற்ற முடியும்.

உங்கள் துணையுடனான உங்களின் அணுகு முறையில் ஈகோ பிரச்சினை காணப்படும். நட்பான அணுகுமுறை மூலம் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்த முடியும்.

தேவையில்லாத செலவுகளால் மனக் கவலைகள் ஏற்படும். அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக செலவுகள் கூடுதலாக இருக்கும்.

## ரிஷபம்

இன்றைய நாளில் மோசமான சூழ்நிலை காணப்படும். அவற்றை சமாளிப்பதற்கு போதுமான தைரியம் இழந்து காணப்படுவீர்கள். எதிர்மறை எண்ணங்கள் நிறைந்திருக்கும். அதை மாற்றி நேர்மறையாக்குங்கள்.

இன்று வேலையில் மும்மரமாக இருப்பீர்கள். இணக்கமான அணுகுமுறை இருந்தால் உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை முடித்து வெற்றி காண்பீர்கள்.

நீங்கள் உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுதலின் காரணமாய் நல்லுறவை பராமரிக்க முடியாது. இது மகிழ்ச்சியை சீர் குலைக்கும்.

இன்று நிதிநிலைமை ஏமாற்றத்தை அளிக்கும். குறைந்த அளவே நிதி காணப்படுவதால் உங்கள் பொறுப்புகளை பூர்த்தி செய்ய இயலாது.

## மிதுனம்

இன்று வளர்ச்சிக்கு சாதகமான நாளாக இருக்க வாய்ப்பில்லை. ஏற்ற இறக்கங்களுடன் காணப்படும். இன்று மனதை அமைதியாகவும் சமநிலை யுடனும் வைத்திருக்க வேண்டியது மிகவும் அவசியம்.

உங்கள் பணியில் முன்னேற்றமான பலன்களைக் காண்பீர்கள். இன்று உங்களுக்கு கிடைக்கும் வாய்ப்புகளால் மகிழ்ச்சி அடைவீர்கள்.

உங்கள் துணையிடம் உங்கள் உணர்வுகளை திணிப்பீர்கள். நல்லிணக்கத்தை தக்க வைத்துக் கொள்ள அத்தகைய உணர்ச்சிப்பூர்வமான போக்குகளை தவிர்ப்பது நல்லது.

பணஇழப்பு காணப்படுகின்றது.

## கடகம்

இன்றைய நாள் நீங்கள்விரைந்து முடிவெடுப்பதற்கு சாதகமாக அமையும். உங்களின் உறுதியான மற்றும் தைரிய மான மனநிலை மற்றும் அதனுடன் சேர்ந்த உங்கள் திறமை காரணமாக உங்கள் இலட்சியத்தில் நீங்கள்வெற்றி காண்பீர்கள்.

இன்று குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை முடிப்பதில் தாமதம் இருக்கும். உங்கள் துணையிடம் இனிமையாகப் பேசுவீர்கள். இது உங்கள் துணையுடனான நல்லிணக் கத்தை மேம்படுத்த உதவும்.

பணவரவு உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். உங்கள் தேவைகளை சமாளிக்க போதுமான பணம் காணப்படும்.

## சிம்மம்

இன்று அழுத்தமான சூழ்நிலைகளும் வெற்றிக்கு குறைந்த வாய்ப்புகளும் காணப்படுகின்றன. தினசரி அலுவல் களை எச்சரிக்கையான அணுகுமுறை யுடன் கையாளவும்.

உங்களிடம் காணப்படும் குறைந்த தன்னம்பிக்கை காரணமாக திறமையாக பணிகளை ஆற்றுவது கடினம். இதனால் பணிகளில் தொய்வு காணப்படும். புணியாற்றும் முறைகளை திட்டமிடுவது நல்லது. புரிந்துணர்வில் காணப்படும் பிரச்சினைகள் காரணமாக வாக்குவாதங்கள் ஏற்படும்.உங்கள் துணையுடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இன்று வீணாண செலவுகள் செய்வதற்கான சாத்தியம் உள்ளது. குடும் பத்துக்காக கூடுதல் செலவினங்களை செய்வீர்கள்.

## கன்னி

இன்று கவலையுடன் காணப்படுவீர் கள். தினசரி செயல்களை மேற்கொள்வ தும் கூட இன்று கடினமாக இருக்கும். களிப்பான அணுகுமுறையை பராமரிப் பதன் மூலம் இன்று நற்பலன்களைக் காணலாம்.

பணிகளில் தவறுகள் நேரலாம். பணிகளில் தவறுகள் நேராமல் தடுக்க உங்கள் நிலைமையை உத்தேசித்து உங்கள் செயல்திறனை மேம்படுத்த வேண்டும்.

பாதுகாப்பின்மை என்ற உணர்வு உங்களை பாதிக்கும். அதனை உங்கள் துணையிடத்திலும் வெளிப்படுத்துவீர்கள். இது உறவில் நல்லிணக்கத்தை பாதிக்கும். உங்கள் துணையுடன் சேர்ந்து இன்றைய நாளை கழிப்பதற்கு உங்களை உற்சாகப்படுத்திக்கொள்ளுங்கள். செலவுகள் பெருகி காணப்படும்.

## துலாம்

இன்று யதார்த்தமான அணுகு முறை தேவை. உங்கள் செயல்களில் உணர்ச்சிவசப்படக் கூடாது. அமை தியாக இருந்தால் எதிர்பார்த்த நற் பலன்கள் கிடைக்கும். வெளியிடங்க ளுக்குச் செல்வது ஆறுதலை அளிக்கும்.

குறித்த நேரததுக்குள் கொடுக்கப்பட்ட பணிகளை முடிப்பீர்கள். உங்களின் சிறப்பான செயல்திறன் மூலம் உங்கள் மேலதிகாரிகளின் நம்பிக்கைக்கு பாத்திரமாவீர்கள்.

உங்கள் துணையுடன் உங்களின் அகந்தையான போக்கை காண்பிப்பதால் உறவின் நல்லிணக்கம் சீர்குலையும். மகிழ்ச்சியை தக்க வைத்துக்கொள்ள அத்தகைய உணர்வுகளை தவிர்த்துவிடுங்கள்.

## விருச்சிகம்

உறுதியுடனும் தைரியத்துடனும் செயல்பட்டு இன்று செயல்களில் வெற்றி கண்டு மகிழ்வீர்கள். உங்கள் தன்னம் பிக்கை அதிகரிக்கும்.

உங்களின் பணியாற்றும் முறையில் உங்கள் திறமை வெளிப்படும். நீங்கள் செய்த பணிக்காக நற்பெயர் பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இருவரும் பொருத்தமான ஜோடிகளாய் மகிழ்ச்சியையும் களிப்பையும் அனுப விப்பீர்கள். இன்று பணம் அதிக அளவில் காணப்படும். உங்கள் சேமிப்பு அதிகரிக்கும். உங்களுக்கு ஆழ்ந்த திருப்தி உண்டாகும்.

இன்று ஆரோக்கியத்தில் எந்தவிதமான குறைபாடு களுமின்றி முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள். நீங்கள் மகிழ்ச்சியாக காணப்படுவீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 30.07.2024

## தனுசு

முக்கியமான விஷயங்களை நிறைவேற்றுவதற்கு உகந்த நாள். ஆன்மீகத்தில் உங்களை ஈடுபடுத்திக் கொள்வதன் மூலம் அமைதியும் ஆறுதலும் கிடைக்கும்.

உங்கள் பணிவளர்ச்சியில் தடைகள் காணப்படும். முறையான திட்டமிடல் மூலம் பணிகளைக் கையாண்டால் பணிச்சுமைகளை கையாளலாம்.

உங்கள் துணையுடனான நேர்மையான போக்கு அவரை மகிழ்ச்சியில் ஆழ்த்தும். இந்த நேர்மை சரியான புரிந்துணர்வை ஏற்படுத்திக்கொள்ள வழிவகுக்கும்.

பணம் அதிகம் பெறுவதற்கான அதிர்ஷ்டம் உள்ளது. கணிசமான தொகையை சேர்ப்பீர்கள். பயனுள்ள விஷயங்களுக்கு பணத்தை செலவு செய்வீர்கள்.

உங்களிடம் காணப்படும் ஆன்மீக சக்திகளின் காரணமாக ஸ்திரமான ஆரோக்கியத்தை நீங்கள் பராமரிக்க முடியும்.

## மகரம்

இன்று அறிவுப் பூர்வமான அணுகு முறையுடன் விஷயங்களை கையாள வேண்டும். வெற்றி அடைவதற்கு நீங்கள் கடினமான முயற்சியுடன் போராட வேண்டும்.

உங்கள் செயல்திறன் மூலம் பணியில் நல்ல பலன்கள் கிடைக்கும். உங்கள் மேலதிகாரிகளின் நன்மதிப்பையும் பாராட்டையும் பெறுவீர்கள்.

மோதல்கள் ஏற்படாமல் இருக்க உங்கள் துணையுடன் பேசும் போது உங்கள் வார்த்தைகளில் மிகவும் கவனமாகப் பேச வேண்டும். எதையும் இலேசாக எடுத்துக் கொள்ளப் பழகுங்கள்.

இன்று முக்கியமான நிதி முடிவுகளை எடுப்பதற்கு ஏற்ற நாள் அல்ல. பெரிய முதலீடுகளில் ஈடுபடுவதை தவிர்க்க வேண்டும்.

## கும்பம்

உங்கள் நலன்களை ஊக்குவிக்கும் விஷயங்களில் முடிவெடுப்பதற்கு இன்று உகந்த நாள். இன்று நீங்கள் நிறைவான திருப்தியுடன் காணப்படுவீர்கள்.

உங்கள் செயல்திறன் மேலதிகாரிகளால் பாராட்டப்படும். பணியில் உங்கள் திறமைகளை காண்பிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் அமைதியான தருணங்களைப் பகிர்ந்து கொள்வீர்கள். இது உங்கள் துணையுடன் நல்ல நட்பான உறவுமுறையை வளர்த்துக்கொள்ள உதவும்.

நிதி நிலைமை மிகவும் திருப்திகரமாக காணப்படும். உங்கள் சேமிப்பு ஆற்றல் அதிகரிக்கும்.

உங்களின் சிறந்த மனநிலை காரணமாக சிறந்த ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.

## மீனம்

இன்று முன்னேற்றமான பலன்கள் காணப்படும். உங்களுடைய உறுதியான முயற்சியால் நீங்கள் மேற்கொண்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். மனஆற்றலும் நேர்மறையான எண்ணங்களும் இருந்தால் வெற்றி கிடைக்கும்.

பணியில் தவறுகளைக் குறைக்கும் வண்ணம் உங்களை மேம்படுத்திக் கொள்ள வேண்டும். கவனச் சிதறல்கள் ஏற்படாவண்ணம் கவனித்துக் கொள்ளுங்கள்.

உங்கள் துணையின் விருப்பத்துக்கு ஏற்ப நடந்து கொள்வீர்கள். இது உங்கள் இருவருக்கிடையேயான உறவுப் பிணைப்பை வலுப்படுத்தும்.

நிதிநிலைமை ஸ்திரத்தனமையுடன் காணப்படும். கையில் உபரி பணம் காணப்படும். அதை ஆக்க பூர்வமான வகையில் பயன்படுத்துவீர்கள். எந்தவிதமான உபாதைகளும் காணப்படாது.

OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA
- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDO OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES
KELSEY HOMES 40 Years Housing Experience
S.Thumilan Group Chairman

CENTRAL PARK
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA

HEAD OFFICE
No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04.
Tel : +94 112 582 582 | Hotline : +94 777 546 546

JAFFNA OFFICE
No. 21/1, Kerathivu Road, Navatkuli, Jaffna.
Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539

Northern PC Park
வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park